06.01.2025 O.S. 147 of 2021 வா.சா.1 கருப்பசாமி

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் தற்போது கோயமுத்தூரில் வசித்து வருகிறேன். நான் கோயமுத்தூரில் 12வருடத்திற்கு மேலாக வசித்து வருகிறேன். இங்கு வந்து வந்து செல்வேன். தபசில் சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 4 ஏக்கர் 93 செண்ட் ஆகும். அதன் சர்வே நம்பர் 1285ஆகும். மேற்படி சர்வே நம்பரில் எத்தனை உட்பிரிவாக உள்ளது என்றால் தற்போது உட்பிரிவுகளாக உள்ளது. 2012-2013ல் உட்பிரிவு செய்யப்பட்டிருக்கும். எத்தனை உட்பிரிவு என்று எனக்கு தெரியாது. தபசில் சொத்தின் பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் பாலாஜி பெயரில் உள்ளது. மேற்படி சர்வே நம்பர் தற்போது இரண்டு உட்பிரிவாக உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. இரண்டு உட்பிரிவு உள்ளது என்றாலும் அது இரண்டும் பாலாஜி பெயரில் தான் உள்ளது என்றாலும் அது எனக்கு தெரியாது. என் பாட்டி சண்முகத்தமாள் பெயரில் உள்ள ஆவணத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். அந்த ஆவணத்தில் சண்முகத்தமாளுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் என் அப்பாவின் அம்மாவான சண்முகத்தம்மாளுக்கு இரண்டு பையன்கள். வேறு வாரிசுகள் கிடையாது என்றால் பெண் வாரிசுகள் உண்டு. வா.சா.ஆ2 ஆவணத்தின்படி சண்முகத்தம்மாளுக்கு இரண்டு ஆண் மக்கள் என்று போடப்பட்டுள்ளது என்றால் ஆவணத்தில் அவ்வாறு தான் உள்ளது. பெண் வாரிசுகள் உண்டு. மூலபத்திரத்தில் ஆண் வாரிசுகள் ஆண்டனுபவித்து கொள்ளுமாறு கூறப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ2 ஆவணத்தில் இனி பிறக்கும் ஆண் வாரிசுகளுக்கும் என்று குறிப்பிடப்பட்ட நிலையில் என் அப்பா மற்றும் என் பெரியப்பாவுடன் வா.சா.ஆ2 ஆவணத்தில் கண்டுள்ள நிபந்தனைகள் முடிந்து விட்டது என்றால் சரியல்ல. அந்த குடும்பத்தில் நானும் ஒரு ஆண் வாரிசு தான். சொத்து என் அப்பாவிற்கும், என் பெரியப்பாவிற்கும் பாத்தியப்பட்ட சுயசம்பாத்திய சொத்து என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கும், என் பெரியப்பாவிற்கும் பாத்தியப்பட்ட என்பதால் தான் என் அப்பா பெயரிலும், என் பெரியப்பா பெயரிலும் அ பதிவேடு உள்ளது என்றால் சரிதான். அதன் அடிப்படையில்

என் அப்பாவும் என் பெரியப்பாவும் வேலாயுதராஜா என்பவருக்கு பவர்கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அது என் அப்பாவின் கையெழுத்து அல்ல. என் அப்பாவின் கையெழுத்து இல்லை என்பதை காட்டுவதற்கான நிபுணர் அறிக்கை பெறுதவற்கான நடவடிக்கை எடுக்க தயாரா என்றால் தயாராக உள்ளேன். என் அப்பாவும் என் பெரியப்பாவும் உயிருடன் இருந்த காலத்தில் நீதிமன்ற நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.நான் வில்லங்க சான்று பார்த்து தான் தெரிந்து கொண்டேன். வேலாயுத ராஜா என்பவர் நல்லதாய் என்பவருக்கு கிரையம் கொடுத்து விட்டார் என்றால் நான் என் அப்பா இறந்தபிறகு இ.சி போட்டு 2006ல் பார்த்த போது தெரிந்தது. இ.சி பார்த்தபோது மேற்படி விபரம் தெரிந்தது என்றால் சரிதான். நல்லதாய் என்பவர் 16.4.2004ல் அகிலாண்டம் என்பவருக்கு ஒரு பவர் கொடுத்த விபரம் இ.சி.யில் துலங்கும் என்றால்சரிதான். வில்லங்கத்தில் 5,6 பெயர்கள் வந்துள்ளது. அகிலாண்டம் முப்புடாதி என்பவருக்கு பவர் கொடுத்த விபரம் இ.சி.யில் துலங்கும் என்றால்சரிதான். வில்லங்கத்தில் 5,6 பெயர்கள் வந்துள்ளது. முப்புடாதி என்பவர் அரிலிங்கம் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. இசியில் துலங்கியிருக்கும். அரிலிங்கம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி விபரங்கள் அனைத்தையும் என் பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யும் போது மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். 2008ம் ஆண்டில் நானும் மற்ற வாதிகளும் ரவிசந்திரன் என்பவருக்கு தாவா சொத்தை கிரையம் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். தாவா சொத்தை நாங்கள் கிரையம் கொடுத்துவிட்டதால் நாங்கள் பாகபிரிவினை கேட்கமுடியாது என்றால் சரியல்ல. நாங்கள் ரவிசந்திரன் என்பவருக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் மோசடியான ஆவணம் என்று பிரதிவாதி டி.ஆர்.ஒ. அலுவலகத்தில் மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த மனு விசாரணையில் நான் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த மனு விசாரணையில் நாங்கள் போட்ட ஆவணம் மோசடியான ஆவணம் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால்

சரியல்ல. நீதிமன்றத்தை நாடி கொள்ளுமாறு கூறியதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதியை தான் நீதிமன்றத்தில் மேற்படி நாங்கள் எழுதி கொடுத்த ஆவணத்தை ரத்து செய்யும் படி பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு கூறினார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் ரவிசந்திரன் என்பவருக்கு எழுதிக்கொடுத்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அது சம்பந்தப்பட்ட தகவல்களை சொல்லியுள்ளேன். டி.ஆர்.ஓ. அலுவலகத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவையும் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் தாக்கல் செய்துள்ளேன். நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த உத்தரவு சரியானது என்பதால் தான் அந்த உத்தரவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிராதிலும் என் நிரூபண வாக்குமூலத்திலும் வழக்கு சொத்தை தவிர மற்ற சொத்துக்களை பொறுத்து வேறு வழக்கு நிலுவையில் உள்ளது என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்ய வில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அ.வ.எண்.2/2014 என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. அ.வ.எண்.2/2014 வழக்கானது 4.6.2018ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 1993ம் ஆண்டிலிருந்து பிரதிவாதியின் முன்பாத்தியஸ்தர்கள் அனுபவம் செய்து வந்தும், அதன்பிறகு பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றாலும் சரியல்ல. தபசில் சொத்து கூட்டு அனுபவத்தில் உள்ளது என்பதை காட்டுவதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் என் அப்பா பெயரில் உள்ளது. நாங்கள் அனுபவம் செய்து வருகிறோம். அனுபவத்தை காட்டுவதற்காக என் பெயரில் ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. எவ்வாறு அனுபவம் செய்து வருகிறேன் என்றால் உள்ளே நுழைய விடாமல் தடுத்து விட்டார்கள். நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தற்போது சொத்து எந்த இடத்தில் உள்ளது என்று சொல்லமுடியுமா என்றால் சர்வே நம்பரில் தான் உள்ளது. அடையாளம் தெரியுமா என்றால் பாலகிருஷ்ணன் இடத்திற்கு கிழ்புறம் உள்ளது. தற்போது முழுவதும் பிரதிவாதியின் இடம் என்றாலும் நான் தவறாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. வில்லங்கம் பற்றிய விபரம் எப்போது தெரியும் என்றால் 2008ல் இசி பார்த்த போது பிரதிவாதியின் வில்லங்கம் துலங்கியது. 2008ம் ஆண்டில் வழக்கு தாக்கல் செய்யாமல் தற்போது காலம் கடந்து வழக்கு தாக்கல் செய்துள்ளதால் என்னுடைய அ பரிகாரம் ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ2 ஆவணத்தில் என் அப்பாவிற்கும், என் பெரியப்பாவிற்கும்

மட்டும் தான் உரிமை உள்ளது என்றாலும், எனக்கோ மற்றவர்களுக்கோ பாத்திய உரிமை கிடையாது என்பதால் என் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளதை ஒப்புக்கொண்டு தான் வா.சா.ஆ5 பட்டாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதியின் அனுபவத்தில் தான் உள்ளது என்றாலும் என் அனுபவத்தில் உள்ளது என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. தாவா சொத்தை ரவிசந்திரனுக்கு எழுதிக்கொடுத்து விட்டதால் எனக்கு அ பரிகாரம் கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.